22nd September 1955]

Sri T. SHANMUGAM: அந்த போர்டுகளில் இனிமேல் ஹிந்தியிலே எழுத வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதா? (சிரிப்பு.)

The Hon. Sri B. PARAMESWARAN: சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்கவேண்டாம்.

Sri A. RATNAM: கனம் அமைச்சர் அவர்களை அழிக்கும் வேலை செய்யச் சொல்லவில்லை. போர்டுகளை ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழில் எழுதிப் பொருத்த வேண்டுமென்று தான கேட்டுக் கொண்டேன். திருவண்ணாமலை பஸ்களில் ஹிந்தி எழுத்துக்களும் இருக்கின்றன. எதற்காக ஹிந்தியில் எழுதப்பட்ட போர்டுகள் பொருத்தப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN: ஹிந்தியில் எழுதியிருப்பதுபற்றி சர்க்காருக்குத் தெரியாது. போர்டுகளைத் தமிழில் எழுதுவதற்கு முயற்சி செய்கிறேன்.

Sri S. PANCHAKSHARAM: நகரத்தில் எழுதப்படிக்கத் தெரியாத மக்கள் பெருவாரியாக இருக்கிறார்கள். இவர்கள் பஸ்கள் எந்த வழிகளில் செல்கின்றன என்று தெரிந்து கொள்ளுவதற்கு சர்க்கார் வழி செய்யுமா?

The Hon. Sri B. PARAMESWARAN: பஸ்களில் ரூட் நெம்பர்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தந்த நெம்பர் பஸ் ஸ்டாண்டுகளில் அந்தந்த பஸ்கள் நிற்கின்றன.

Report of the Secondary Education Commission

* 2385 *Q.*—**Sri N. K. PALANISAMY:** Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government constituted any committee in 1954 to examine the recommendations of the Secondary Education Commission?

The Hon. Sri C. SUBRAMANIAM: Yes, Sir.

Sri N. K. PALANISAMY: சமீபத்தில் ஸிண்டிகேட் செகண்டரி படிப்பை 10 வருஷங்களிலிருந்து 11 வருஷங்களாக ஆக்குவதாக முடிவு செய்திருக்கிறது. இது பற்றி சர்க்கார் அபிப்பிராயம் என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM: இப்பொழுது ஸிண்டிகேட் 'Pre-University Course' என்ற ஒரு வருஷப்படிப்பும் Degree Course-யை மூன்று வருஷ படிப்பாகவும் வகுத்திருக்கிறது. அதற்கும் செகண்டரி கல்விக்கும் சம்பந்தமில்லை.

Reconstitution of University bodies according to recommendation of Radhakrishnan Commission.

* 2386 *Q.*—**Sri N. K. PALANISAMY:** Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have sent a circular to this Government to amend the University Acts so as to reconstitute the Syndicate, the Senate and the Academic Council and other University bodies according to the recommendations of the Radhakrishnan Commission; and

(*b*) if so, the action taken thereon?

[22nd September 1955

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The matter is separately under consideration.

SRI N. K. PALANISAMY : ஒருவர் ரூ 10,000-க்கு மேல் " டொனேஷன் " கொடுத்தால் அவருக்கு ஒரு " ரெப்ரஸென்டேஷன் " கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி " நாமினேஷன் "களை குறைக்க வேண்டும். ராதாகிருஷ்ணன் கமிட்டியாரின் சிபார்சுகளின்படி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரூ. 10,000 சமாசாரம் என்னவென்று விளங்கவில்லை. ராதாகிருஷ்ணன் கமிட்டி சிபார்சுகளை அனுசரித்து இப்பொழுது சர்வகலாசாலை சட்டத்தைத் திருத்த வேண்டுமா, திருத்த வேண்டியதில்லையா என்பது பற்றி பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

DR. K. B. MENON : Is it the intention of the Government to bring into effect all the recommendations of the Radhakrishnan Commission? Or have the Government deferred any decision or taken any decision on the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : The main question relates only to the amendment of the University Acts in accordance with the recommendations of the University Commission. This matter is under consideration and if the hon. Member wants information with regard to any other recommendation, he may put a separate question.

Extraction of aluminium from Bauxite Ores in Salem district

* 2387 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government to extract aluminium from the Bauxite ores in Pachamalai and Kollimalai in Salem district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are no known deposits of bauxite in Pachamalai and Kollimalai in Salem in Salem district. Bauxite deposits are reported to occur only in the Shevaroy Hills in the Salem district. As already stated in reply to Starred Question No. 853 on the floor of the House on 23rd February 1955 the Planning Commission has been addressed to arrange for an expert study of the development of the Shevaroy bauxite deposits and to include a scheme for their exploitation in the Second Five-Year Plan of the Government of India.

SRI N. K. PALANISAMY : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது இம்மாதிரி அலுமினியம் எடுப்பதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக் கொண்டாலும் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும் நாங்கள் எடுத்து நடத்தப் போகிறோம் என்று கனம் நிதி மந்திரி சொன்னார். ஆனால் கனம் விவசாய மந்திரி அவர்கள் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இம்மாதிரி சர்க்கார் எடுத்து நடத்த வேண்டிய அவசியமில்லை, தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார். இதிலிருந்து சர்க்காருடைய கொள்கை என்னவென்பது தெரியவில்லை. ஒருவர் சொல்வது மற்றவர் சொல்வதற்கு முரணாக இருக்கிறது. யார் சொல்வது சரி என்று கேட்க விரும்புகிறேன்.